2024 – ஆகஸ்ட் மாதம் 27– ஆம் தேதி செவ்வாய்க்கிழமை
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பெரம்பலூர்.

*எம்.சி.ஓ.பி. நெம்பர் : 34 / 2020*

*2024–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27– ஆம் தேதி செவ்வாய்க்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய R W 2 , வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. N. லலிதா,* Gr.II Bench Clerk *அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.*

| | | |
|---|---|---|
| பெயர் | : | R W 2, Dr. ராமசாமி |
| தகப்பனார் பெயர் | : | பெரியகருப்பன் |
| ஊர் | : | திருச்சி |
| வட்டம் | : | திருச்சி |
| மாவட்டம் | : | திருச்சி |
| தொழில் | : | மருத்துவர் (திருச்சி காவேரி மருத்துவமனை) |
| வயது | : | 56 |

<u>தேதி: **27.08.2024.**</u>

**<u>முதல் விசாரணை:–</u>**

நான் தற்போது திருச்சி காவேரி மருத்துவமனையில் எலும்பு சிகிச்சை மருத்துவராக பணிபுரிகின்றேன். நான் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். மனுதாரர் ராஜ்குமார் என்பவர் 29.01.2020 அன்று எங்கள் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வந்தார். அவருக்கு உள்நோயாளியாக சிகிச்சை வழங்கி 30.01.2020–ம் தேதியன்று மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்டார். ம.சா.ஆ.4 ஆவணம் எங்களால் வழங்கப்பட்டது. ம.சா.ஆ.4 ஆவணத்தில் எங்கள் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வருவதற்கு 10 நாட்களுக்கு முன்னர் இடது முழங்காலில் வீக்கம் இருந்ததாக கூறினார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ம.சா.ஆ.4 ஆவணத்தில் தனக்கு விபத்து ஏற்பட்டதாக கூறவில்லையென்றால் சரிதான். மனுதாரர் ராஜ்குமார் என்பவருக்கு ம.சா.ஆ.4 ல் குறிப்பிட்டுள்ள காயங்கள் விபத்தினால் ஏற்பட்ட காயங்கள் அல்ல என்றால் சரிதான். ம.சா.ஆ.3 ஆவணத்தின் படி

மனுதாரர் ராஜ்குமார் என்பவருக்கு எங்கள் மருத்துவமனையில் விபத்தினால் ஏற்பட்ட காயத்திற்கு சிகிச்சை வழங்கப்பட்டிருந்தது, மேற்படி ம.சா.ஆ.3 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள காயங்களுக்கும் ம.சா.ஆ.4 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள காயங்களுக்கும் தொடர்பில்லையென்றால் சரிதான். மேற்படி காயங்கள் மனுதாரர் ராஜ்குமார் உடலில் வெவ்வேறு பாகத்தில் ஏற்பட்ட காயங்கள் ஆகும். மனுதாரர் ராஜ்குமார் என்பவருக்கு ம.சா.ஆ.4 ன் படி மூட்டில் வீக்கம் தானாக ஏற்பட்டதாகும்.

**குறுக்கு விசாரணை:– ( மனுதாரர் தரப்பில்)**

ம.சா.ஆ.3 ஆவணத்தின் படி மனுதாரர் ராஜ்குமார் 22.12.2019 முதல் 02.01.2020 வரை எங்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளார் என்றால் சரிதான்._ம.சா.ஆ.3 ஆவணத்தின் படி ஏற்பட்ட காயங்கள் விபத்தினால் ஏற்பட்ட காயங்கள் என்றால் சரிதான். ம.சா.ஆ.3 ஆவணத்தின் படி இடது கைவிரல் எலும்பு முறிவு, பல்வேறு முகஎலும்பு முறிவு, ஏற்கனவே உள்ள சர்க்கரை வியாதி பாதிப்பு ஆகியவை இருந்தன. விபத்து பதிவேட்டின் படி மனுதாரர் எங்கள் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேரும் போது அவருக்கு இடது காலில் அடிபட்டதாக குறிப்பு உள்ளது என்றால் இல்லை. 11.01.2020–ம் தேதி மனுதாரருக்கு பிளாஸ்டிக் சர்ஜரிக்கு வருமாறு ம.சா.ஆ.3 ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ளது. 11.01.2020 தேதி முதல் 29.01.2020–ம் தேதி வரை மனுதாரர் புறநோயாளியாக தொடர் சிசிச்சையில் இருந்து வருவார் என்றால் சரிதான். மனுதாரருக்கு இடது காலில் ஏற்பட்ட வீக்கம் அவர் ம.சா.ஆ.3 ஆவணத்தின் படி சிகிச்சை முடித்த பிறகு ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் இல்லை. அந்த வீக்கம் மருத்துவ பரிசோதனையின் படி இயற்கையாகவே வரக்கூடியதாகும். அந்த வீக்கத்திற்கு மனுதாரர் இரண்டு நாட்கள் சிகிச்சை எடுத்துக்கொண்டார். அந்த வீக்கத்திற்காக மனுதாரர் தொடர் சிகிச்சை

மேற்கொள்ளவேண்டிய அவசியம் இல்லை. ம.சா.ஆ3 ஆவணத்தின் படி உள்ள காயங்களுக்கு தொடர் சிகிச்சை மேற்கொள்ள வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.

**<u>மறு விசாரணை:– இல்லை.</u>**

**ஒப்பம்/- சி. சங்கர்,**
**தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,**
**பெரம்பலூர்.**